விலை, ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆவணி 19 ஜூலகம் 15 இதழ் 203

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4—9—82

BETTER BUY
UNIFO
STEEL CABINETS
Manufacturers and Distributors
U. F. O.
INDUSTRIES LTD.
4430

வீடியோ ரசிகர்களே!
வந்துவிட்டன
எம். ஜி. ஆரின் காவல்காரன்
ரஜனியின் ரங்கா
சரத்பாபுவின் மெட்டி
சிவாஜியின் அமரதீபம்
குணம்வீடியோசென்ரர்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8238
அடுத்த வெளியீடு: சங்கிலி
4419

# பரந்தன் வேலைநிறுத்தம் முடிவு?

# 15ல் வேலைக்குத் திரும்புவார்கள்

## தொழிற்சங்கம் - நிர்வாகம் உடன்பாடு: 6ல் கைச்சாத்து

### முக்கிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன

(நமது சிறப்பு நிருபர்)

**ஒன்பது மாதங்களாக நீடித்து வரும் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களின் வேலை நிறுத்தம் அடுத்த வாரம் கைவிடப்படலாம் எனத்தெரியவருகிறது.**

**வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களினதும், தொழிலாளர்களினதும் முக்கிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே வேலைநிறுத்தம் கைவிடப்படுவதாக அறியப்படுகிறது.**

**நாளை மறுதினம் திங்கட்கிழமை இரசாயன கூட்டுத்தாபன நிர்வாகத்துக்கும் தொழிற்சங்கத்துக்குமிடையே கைசாத்திடப்படும் உடன்படிக்கையைத் தொடர்ந்து இம்மாதம் பதினைந்தாம் திகதி ஊழியர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தின் பரந்தன் தொழிற்சாலையில் தொழில் நுட்ப எழுதுவினைஞர் மற்றும் உடல் உழைப்புத்தொழிலாளர்கள் 375 பேர் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர்.

வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளான —

● தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களை மீண்டும் வேலையில் அமர்த்துதல் ● மூடப்பட்ட தொழிற்சங்க அலுவலகத்தை மீண்டும் திறப்பது ● சமயாசமய ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவது போன்றவற்றை நிர்வாகம் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்தே மேற்படி வேலை நிறுத்தம் கைவிடப்படுவதாக அறியப்படுகிறது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை, கூட்டுத்தாபன நிர்வாகத்துக்கும், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்தாகும் என்றும், தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்கள் எவ்வித நிபந்தனை–விசாரணைகள் இல்லாமல் இம்மாதம் பதினைந்தாம் திகதி வேலைக்குத்

(8–ம் பக்கம் பார்க்க)

## இந்திய பத்திரிகைகள் நேற்று வெளிவரவில்லை

### வேலைநிறுத்தத்தின் எதிரொலி

புதுடில்லி, செப். 1

இந்தியாவின் பீகார் மாநில சட்டசபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்து இந்தியப்பத்திரிகையாளர்கள் நேற்று 24 மணித்தியால வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்று இந்தியாவின் பிரபல பத்திரிகைகளும் நாளாந்த ஏடுகளும் வெளிவரவில்லை.

இந்திய மத்திய அமைச்சரவையில் புதிய செய்தி, தகவல் துறை அமைச்சராக திரு. ஷால்பே நியமிக்கப்பட்டுள்ள வேளையிலேயே இவ்வேலைநிறுத்தமும் இடம்பெற்றுள்ளது.

ஜவஹர்லால் நேருவினால் ஸ்தாபிக்கப்பட்ட 'நாஷனல் ஹெறல்ட்' என்ற பத்திரிகை நேற்று வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. (வெ)

## இந்திய டிக்கட்டுகள் திடீர் நிறுத்தம்!

யாழ்ப்பாணம்)

இந்தியா செல்லும் பிரயாணிகளுக்கு யாழ். புகையிரத நிலையத்தில் வழங்கப்பட்டுவந்த படிவங்களும், டிக்கட்டுகளும் மறு அறிவித்தல் வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், டிக்கட்டுகள் வழங்கப்படமாட்டாதென்றும் யாழ். புகையிரத நிலையபிரதம அதிபர் தெரிவித்தார். (வெ)

## குமார் கட்டுப்பணம் செலுத்தினர்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம்நேற்றுக்காலை தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தமது கட்டுப்பணமான 50,000 ரூபாவை செலுத்தினர்

ஜனாதிபதிபதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் முதலில் கட்டுப்பணம் செலுத்தியவர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

## தாதிமார் திடீர்ச் சுகயீனம் நோயாளர் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த இருபத்து நான்கு தாதிமார், நேற்று முன்தினம் திடீர்த்சுகயீன 'லீவில்' சென்றதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தாதிமார்களின் 'திடீர்ச் சுகயீனம்'' குறித்து யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புதன்கிழமை நள்ளிரவு சேவையாற்ற வேண்டிய தாதிமார்களே திடீர்ச் சுகயீன லீவில் சென்றனர்.

### மலையக ஆசிரியர் நியமனம்:

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு!

[கொழும்பு]

402 மலையகப் பாடசாலை ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக இன்று ஆரம்பமாகவிருந்த நேர்முகப் பரீட்சை கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இந்த நேர்முகப் பரீட்சைக்கான திகதிபற்றி பின்னர் அறிவிக்கப்படுமென கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு. ஆரியரத்ன தெரிவித்தார். [வெ]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான துந்துபி ஆண்டு ஆவணி மாதம் 21–ம் நாள் (6—9—82) திங்கட்கிழமை பகல் 1–30 முதல் 2–30 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

| எமது புதல்வன் திருநிறை செல்வன் க.கிருஷ்ணானந்தம் (உரிமையாளர்: நல்லூர் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்) அவர்கட்கும் | எமது புதல்வி திருநிறை செல்வி சூரியகுமாரி அவர்கட்கும் |
|---|---|

கந்தர்மடம் அம்மன் வீதியில் மணமகள் இல்லத்தில் திருமணஞ்செய்யப் பெரியோர் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நோக்கும்

திரு ச. கனகரத்தினம்
திருமதி. ம. கனகரத்தினம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

திருமதி
க. கனகசபாபதி
3, அம்மன் வீதி,
கந்தர்மடம்

க. சி. குலரத்தினம்
(மணமகளின் பெரியப்பா)

4418

# வரி விளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த அச்சுக் கோப்பாளர், பைன்டர் தேவை. நேரில் வரவும். சித்திரா அச்சகம். 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4405

மரத்தில் விளையாட்டுப் பொருட்கள் தயாரிக்கும் கடைச்சல் தொழிற்சாலைக்கு அனுபவமும் திறமையுமுள்ள தொழிலாளர் தேவை. 10-9-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், திருக்கணித அச்சகம், சாவகச்சேரி, 4395

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள லான் மாஸ்ட்டர் கலப்பை, பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; முனீஸ்வரன் மோட்டர் வேக்ஸ் (லைடன் பெனியன் தொழிற்சாலைக்கு அருகாமையில்) ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 4399

கலப்பற்ற அல்சேஷன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இன விருத்திக்காக சிறந்தமுறையில் வளர்க்கப்பட்ட ஆண் நாய்கள் எம்மிடம் உண்டு, க நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 4411

8 சிறி 2000 மொறிஸ் ஒக்ஸ்போட் (U. K. Original) கார் காட்சி அறை நிலையில் உடன் விற்பனைச்குண்டு. தொடர்பு: கந்தையா மாஸ்டர் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில். 4370

புதிய SISIL குளிர்சாதனப் பெட்டி ஒன்று விற்பனைக்குண்டு. 383/2, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4416

**Wanted Cooks**

Two Cooks experienced in Sri Lankan Dishes and Snacks wanted to work in London.

Apply to:
S. SOMAPALAN
Jaffna Fried Chicken
206, Church Road,
London N. W. 10,
England.

4417


# அறிவித்தல்

## மின் விநியோகம்

1982ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமையும், 4ந் திகதி சனிக்கிழமையும், 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 7-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மின் மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் யாழ்ப்பாண பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மின்பொறியிலாளர்,
(யாழ். பிரதேசம்)
இலங்கை மின்சார சபை,
சுன்னுகம்.

4331

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 19-ம் திகதி

சனிக்கிழமை

(4—9—82)

மேடம்: உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. எண்ணிய கருமத்திலும் தடைகள் நீங்கப் பொறுமை வேண்டும்.

இடபம்: எல்லாத் துறைகளிலும்அபிவிருத்தி காணப்படும். மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக்கு இடமுண்டு. நண்பர்களின் உதவியும் அவசியம் கிடைக்கலாம்.

மிதுனம்: தெளிந்த மனம் தெய்வசிந்தைதேடியதுகிடைக்கும். அமைதியுடன் ஆனந்தமான வாழ்வும் உண்டு நடவடிக்கைகளின் மூலம் வெற்றியும் காண முடியும்.

கடகம்: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசர முடிவு ஆபத்தில் சிக்க வைக்கலாம். குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும். பிரிவுக்கும் இடமுண்டு.

சிங்கம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிகஆர்வம் பிறக்கும். பிள்ளைகளினுல் பெருமைக்கும் இடமுண்டு. காதல் வசப்பட்டவர்களுக்கு இனிமையான தினம்.

கன்னி: தொல்லைகள் அதிகரிக்கும். எதிர்பாராத தடைகள் ஏற்படும். கடமையாற்றும் இடத்தில் கழுகுப் பார்வை வட்டமிடும். பணவிடயத்தில் அதிக சிந்தை நன்று.

துலாம்: உயர்ந்த உண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச்செல்லும். தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். கால்நடை விருத்திச்கு இடமுண்டு.

விருச்சிகம்: வசதிகள் பெருகும். வாழ்க்கையும்வளமாகும். தொழில் துறையில் புதியவெற்றிகள் கிடைக்கும். இன்று சுப தினம். பதவியில் உயர்வு கிடைக்கலாம்.

தனு: புதிய வெற்றிகள் மூலம் பொருள் வரவுக்கும் இடமுண்டு. சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் இனிமை தழுவும். பிள்ளையொன்றின் கல்வியில் அதிக கவனம் செலுத்த நேரிடலாம்.

மகரம்: சிந்தனையில் குழப்ப நிலை உருவாகும். விவசாயத் துறை மூலம் நஷ்டமும் ஏற்படலாம். இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். அவதானம் வேண்டும்.

கும்பம்: உணர்ச்சிமயமான தினம். மனப்போராட்டங்கள் நடைபெறும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

மீனம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். இரு மனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

சோதிடக் கலாநிதி

திருமலை
க. வேலுப்பிள்ளை

# கும்பாபிஷேகம்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகம் 6ம் திகதி திங்கள் காலை 6.30 மணிக்கு நிகழ இருக்கின்றது.

2ம் திகதி வியாழக்கிழமை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது.

# டாக்டர் விஸ்வபாரதி

சிறந்த சுதேச வைத்திய நிபுணனுக, ஆராய்ச்சியாளனுக, விரிவுரையாளனுக, எழுத்தாளனுக, கலைஞனுக மிளிர்ந்த டாக்டர் வி. க. விஸ்வலிங்கத்தின் (விஸ்வபாரதி) இழப்பு எம்மைக் கண்கலங்க வைக்கிறது.

தந்தையார் இராச வைத்தியர் கனகசபையின் அடிச்சுவட்டில் யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் பயின்று அங்கேயே பதினறு வருடங்கள் விரிவுரையாளராகக் கடமையாற்றிய அவரது பணியை சுதேச வைத்திய சமுதாயம் மறந்துவிடமுடியாது.

குறுகிய காலத்தில் சுய முயற்சியின் மூலம் முன்னேறி வடபகுதியிலேயே சிறந்த சுதேச வைத்திய நிபுணனுகத் திகழ்ந்தவர். சித்தவைத்தியத் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்ற வேணவா அவருக்கிருந்தது. அதனுல் தனது சொந்தச் செலவிலேயே ஆராய்ச்சி பல செய்தார்.

யாழ். ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் அதன் நிலை குறித்து பெரிதும் கவலையடைந்திருந்தார். அதன் முன்னேற்றத்திற்காகப் பெருமளவு செலவு செய்தார். அக்கல்லூரி அங்கீகாரம் பெறவும், அதன் நிர்வாகம் சிறக்கவேண்டுமெனவும் அவர் பட்டபாடு சொல்லொணுது.

அகில இலங்கை சித்த வைத்திய சங்கத்தின் இணைச்செயலாளராகவிருந்து அரும்பணியாற்றினுர். ஆற்றல் மிக்க பணியாளன் அவர்.

''ஆயுர்வேதக் கல்லூரியில் ஒரு பலப்பரீட்சை! வெற்றி தோல்வி தெரிவிக்கப்பட்டது. வெற்றிவிழா நடைபெறுகிறது. விஸ்வலிங்கம் யாருக்கு ஆதரவு? அவர் பேச வந்தார். 'வென்றவர்களுக்குக் கை கொடுக்கிறேன்' என்றுர். கைதட்டல்! 'தோற்றவர்களுச்கு இதயத்தைக் கொடுக்கிறேன்' என்றுர். பலத்த கைதட்டல்! வரவேற்பு!' இப்படி இடமறிந்து அழகாகப் பேசும் ஆற்றல் அவருடையது.

இலங்கை இலக்கிய இரசிகர் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றினுர்.

அவர் எழுதிய பல கட்டுரைகள் வைத்திய உலகில் பாராட்டுப் பெற்றவை. ஈழத்தின் தினசரிகள் பலவற்றிலும் அவரது வைத்திய, இலக்கிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. புகழ்பெற்ற பேராசிரியர்களது கட்டுரைகளுக்கே சிறப்பிடம் அளிக்கும் தமிழ் அறிவியல் சஞ்சிகையான 'கலைக்கதிர்' டாக்டர் விஸ்வலிங்கத்தின் வைத்தியக் கட்டுரைகளை விரும்பிப் பெற்று தொடர்ப்து பிரசுரித்துக் கௌரவித்தது, பாராட்டுத் தெரிவித்தது. அவரது கட்டுரைகளை வைத்திய மாணவர்கள் – வைத்தியர்கள் பொன்னெனப் பேணிப் பாதுகாப்பதிலிருந்தே அவற்றின் சிறப்புப் புலனுகும்.

யாழ். நகரின் மத்தியில் ஒரு சுதேச வைத்தியன், புகழ்பெற்ற பெரிய டாக்டர்களை விஞ்சும் அளவுக்கு உழைத்தமை – புகழ்பெற்றமை டாக்டர் விஸ்வலிங்கத்தையே சாரும். அவர் நினைத்திருந்தால் ஒரு இலட்சாதிபதியாகத் திகழ்ந்திருக்கலாம். ஆனுல் அவர் ஏழையாகவே வாழ்வை முடித்துக்கொண்டார். அன்பு நெஞ்சங்கள் தான் அவர் தேடிக்கொண்ட செல்வங்கள்!

டாக்டர் வி ரி. இளங்கோ

### மயிலிட்டி கோரக்கொலை:

# மரணவிசாரணை

## மீண்டும் ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி கோரக்கொலை குறித்த மரணவிசாரணை மீண்டும் இம்மாதம் 6 ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

மயிலிட்டியைச்சேர்ந்த சீனியர் துரைசாமி 44 வயது என்பவர் மயிலிட்டி – கட்டுவன் வீதியில் வைத்து கோரமாக வெட்டப்பட்டும், தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஸ்தல விசாரணை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் விசாரணையை ஒத்திவைத்திருந்தார்.

இவ்விசாரணை மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது யாழ். சட்ட வைத்திய அதிகாரி திரு. என். சரவணபவான் சாட்சியமளித்தார்.

கொலையுண்டவரின் உடலில் பல காயங்கள் இருந்ததாகவும் அவற்றில் இரண்டு காயங்கள் பாரதூரமானவையாக இருந்ததாகவும் அவ்விரண்டு காயங்கள் தொடர்பாகவும் உடனடி சிகிச்சை மேற்கொள்ளப்படாவிடில் மரணத்திற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்க முடியுமென்று காயங்களினுல் ஏற்பட்ட அதிர்ச்சி, இரத்தப் பெருக்கு என்பவற்றுல் மரணம் சம்பவித்துள்ளதென்றும் அவர் கூறினுர்.

இதனையடுத்து மரண விசாரணையை இம்மாதம் 6ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி ஏனைய சாட்சிகளை ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை செய்துவரும் காங்கேசன் துறைப் பொலிசார் பெண்மணி யொருவரையும் கார்ச்சாரதி யொருவரையும் விசாரணைக்குட்படுத்தி விடுவித்த பின்னர் தற்போது மற்ருெருநபரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இக்கொலைக்குக் காரணம் குடும்ப உட்பகையே என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

### புளியந்துறை மீன்பிடித்துறையில்.

# இடையூருகவுள்ள கற்களை அகற்றக்கோரிக்கை

[சுழிபுரம்]

''சுழிபுரம் புளியந்துறை மீன்பிடித்துறைமுக நுழைவாயிலில் மீன்பிடி வள்ளங்கள் வந்து கரைசேர முடியாமல் பாரிய கற்கள் காணப்படுகின்றன. இதனுல் மீன்பிடியாளர்கள் தங்கள் தொழிலை திறம்படசெய்யமுடியாமல் பெரும் கஷ்டம் அடைகின்ருர்கள் உடனடியாக அப்பகுதியில் வளர்ச்சியடைந்த பாரிய கற்களை உடைத்து தரைமட்டமாக்க வேண்டியதுடன் அவற்றை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். சென்ற அரசாங்க காலத்தில் இப்படியான ஓர்சேவை நடைபெற்று மீன்பிடியாளர்கள் பெரும நன்மையடைந்தனர். இவ்வாருன ஒருபணியை உடன்செய்துதர வேண்டும்''.

இவ்வாறு யாழ். அபிவிருத்திசபைதலைவர், அரச அதிபர், மீன்பிடிகூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோரைக்கோரும் தீர்மானம் சுழிபுரம் மேற்கு கிராமோதயசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# இரத்தப்பெருக்கும் அதிர்ச்சியும் மரணத்துக்குக் காரணம்!

### கொலைவழக்கில் வைத்தியஅதிகாரி அபிப்பிரரயம்

(சாவகச்சேரி)

சம்பவதினம் பத்மநாதன் என்பவரின் பிரேதச பரிசோதனையை சாவகச்சேரி வைத்தியசாலையின் பிரேதச்சாலையில் நடத்தினேன். இவரின் சடலத்தை இவரின் சகோதரர் லியோ ஸ்டீபனும் எஸ்.செல்வராசாவும் அடையாள காட்டினுர்கள்.

பத்மநாதன் என்பவரின் கொலைதொடர்பான வழக்கில் சாவகச்சேரி வைத்திய அதிகாரி கே. சண்முகநாதன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது 81செப்ரம்பர் 8-ல் ஈச்சமோட்டைலொறிடிறைவர் பத்மநாதனை மிருசுவிலில்வைத்து எழுதுமட்டுவாளைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை புவனேந்திரன், கஸ்பார்கிறீஸ்துதாசன் அல்லது நவம் சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் அல்லது வேதநாயகம், சூசைப்பிள்ளை மரியதாஸ் அல்லது ஜெயம், சிவஞானசுந்தரம் சிவநேசன் அல்லது நேசன், இராசரத்தினம் விவேகானந்தராசா அல்லது ஜெகன் ஆகியோ கொலைசெய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாயாவும் சட்டத்தரணி செ. அப்பிகைபாலனும் வழக்காளிசார்பில் பொலிஸ் உத்தியோகஸ்தர் கிருஷ்ணபிள்ளையும் ஆஜராகினர்.

தொடர்ந்துசாட்சியமளித்த வைத்திய அதிகாரி சண்முகநாதன் தமது அபிப்பிராயப்படி இறந்தவரின் மரணம் பல காயங்களின் விளைவாக ஏற்பட்ட இரத்தப்பெருக்கினுலும் அதன் தொடர்பாகவுள்ள அதிர்ச்சியினுலும் ஏற்பட்டிருக்கலாம் என்றுர்.

அடுத்த தொடர்விசாரணையை நீதிபதி ஒக்டோபர் 12ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

# நடப்புவருட நிர்வாகிகள்

(நயினுதீவு)

நயினை ஸ்ரீ கணேச விளையாட்டுக்கழக அங்குரார்ப்பணக் கூட்டம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. சு. கனகராசா தலைமையில் ஸ்ரீ கணேச சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருடத்துக்கான நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: ரி மகாலிங்கம், உப தலைவர்: எஸ் சந்திரசேகரம், செயலாளர்: என். நடராசா, உபசெயலாளர்: ஆர். கிருபாகரன், பொருளாளர்: ஆர். பேரின்பநாதன்.

போஷகர்கள், கணக்காய்வாளர் உட்பட 6 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

பாலஸ்தீன மக்களுக்கு ஒரு தனிநாடு

# றீகனின் சமாதானதிட்டத்தை இஸ்ரேல் நிராகரித்தது

## இரு நாட்டு உறவில் நெருக்கடி

வாஷிங்டன், செப். 3

**பாலஸ்தீனர்களுக்கு ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையிலும் காத்ஸா பகுதியிலும் தனிநாடு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகனின் மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை இஸ்ரேலிய அமைச்சரவை நிராகரித்தது.**

அமெரிக்க சமாதானத் திட்டம் குறித்து இஸ்ரேலிய அமைச்சரவை அவசரமாகக் கூடி ஆராய்ந்தது.

**யு. எஸ். பாதுகாப்பு அமைச்சரிடம் எதிர்ப்புத் தெரிவித்தார்**

இத்திட்டம்பற்றிய இஸ்ரேலிய அரசின் கண்டனத்தையும் எதிர்ப்பையும் இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனச்சம் பெகின் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. வைன்பேக்கரிடம் தெரிவித்துள்ளார்.

திரு. றீகனின் சமாதானத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் 'காம்ப் டேவிட்' ஒப்பந்தத்துக்கு விரோதமாகஉள்ளதாகத் திரு. பெகின் அமெரிக பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் அமெரிக்காவின் இத்திட்டத்தினல் அமெரிக்க இஸ்ரேல் உறவில் நெருக்கடி தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சமாதான திட்டத்தில் ஆக்கபூர்வ யோசனைகள்

## பாலஸ்தீன அதிகாரிகள் கூற்று

லண்டன், செப். 3

அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகனின் மத்திய கிழக்கு சமாதானத்துக்கான புதிய திட்டத்தில் சில ஆக்கபூர்வமான யோசனைகள் இருப்பதாக பாலஸ்தீன விடுதலை இயக்க அரசியல் பீடத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதியதிட்டத்திற்கு வேறு சில அரபுநாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இத்திட்டம் குறித்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் எடுக்கும் தீர்மானமே இறுதியானது என்று ஜோர்டானும் டூனிஷியாவும் தெரிவித்துள்ளன,

# 7 அடி நீள வெள்ளரிக்காய்

மாஸ்கோ, செப். 3

சுமார் ஏழுஅடிநீள வெள்ளரிக் காய்கள் சோவியத் யூனியனில்உள்ளன.

இதில் விசேஷம் என்ன என்றால், வெள்ளரிச்செடி முதலில் இந்தியாவில்தோன்றிய தாவர வகையாகும். வெப்ப மண்டலத்திலேயே இதுநன்றாக வளரும் குளிர்ப் பிரதேசத்தில் வளராது. குளிர்ப் பிரதேசமாகிய ரஷ்யாவில் 100 ஆண்டுகளுக்கு முன்பே வெப்பக்கூடங்கள் அமைத்து அவற்றில் வெள்ளரியைப் பயிரிடத்தொடங்கினர்.

இப்பொழுது சோவியத் யூனியனில் ஆண்டுமுழுவதிலும் வெப்பக்கூடங்களில் வெள்ளரி பயிரிடப்படுகிறது.

சோவியத் தாவர இயலாளர், திறந்த வெளிப் பண்ணைகளில் 60க்கு அதிகமான வெள்ளரிக்காய் வகைகளையும், வெப்பக் கூடங்களில் 40க்கு அதிகமான வெள்ளரிக்காய் ரகங்களையும் பயிரிடுகின்றனர்.

பெரியகுளம் இடைத்தேர்தல்:

# இ. காங்கிரசின் வெற்றிக்கு உதவ எம். ஜி. ஆர். மறுப்பு!

சென்னை, செப். 3

பெரியகுளம் இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக அதிமுக வேட்பாளரை வாபஸ்பெறச் செய்வதற்கு தமிழக முதல்வருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்துள்ளன.

இத் தகவலை இந்திரா காங்கிரஸின் விசேட பிரதிநிதி திரு. சங்கர் தயாள் சர்மா தெரிவித்தார்.

இவ்விஷயம் குறித்து தாம் திரு. இராமச்சந்திரனை அவரது இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தியதாகவும் அப்பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடிவுற்றதாகவும்திரு. சர்மா தெரிவித்தார்.

இன்றைய அரசியல் நிலையில் இடைத்தேர்தல் போட்டியிலிருந்து விலகுவது சாத்தியமில்லை என்று திரு. இராமச்சந்திரன் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இதுகுறித்து தாம் திமுக தலைவர் திரு. மு. கருணாநிதியைச் சந்தித்துப் பேச விரும்பிய போதிலும் அவர் சென்னையில் இல்லாததினால் அவரை சந்திக்க முயடியவில்லை என்றும் திரு. சர்மா கூறினார். (இ)

## போலந்தில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன

வார்ஸோ, செப், 3

போலந்தில் அரசாங்கத்திற்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான ஆர்ப்பாட்டங்கள் இன்று வரை தொடர்ந்து நடைபெற்றன என்றும் இதுவரை 250 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கஞ்சா கடத்தியவருக்கு ரூ. 1000 அபராதம்!

(மன்னர்)

பஸ்வண்டியில் கஞ்சா கடத்திச்சென்றவருக்கு மன்னர் நீதவான் ஆயிரம்ரூபா அபராதம் விதித்தார். நீர்கொழும்பைச் சேர்ந்த யோசப் பர்னந்து என்பவருக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

இவர் பஸ் வண்டியில் பயணம் செய்தபோது சந்தேகம் கொண்ட தலைமன்னர் பொலிஸ் சார்ஜண்ட் கே. நடராஜலிங்கம் இவரது பார்சலை சோதனையிட்டபோது இரண்டரை இருத்தல் கஞ்சா இருப்பதைக் கண்டுபிடித்தார்.

சந்தேகநபர் மன்னர் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பெண்களுக்கான கிரிக்கெட்

# இந்திய அணியிடம் இலங்கை தோல்வி!

## காப்டன் சாந்தா 60 ஓட்டங்கள்!

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை கொழும்பு ஹவ்லொக்மைதானத்தில் செல்வி சாந்தாராங்கசாமி தலைமையிலான இந்திய பெண்கள் கிரிக்கெட் கோஷ்டி இலங்கை பெண்கள் கிரிக்கெட் கோஷ்டியை 86 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மட்டுப்படுத்தப்பட்ட 35 ஓவர்களைக்கொண்ட இந்த கிரிக்கெட் பந்தயத்தில்இந்திய அணியின் தலைவி செல்வி சாந்தாரங்கசாமி, ஐந்து நான்கு ஓட்டங்களையும், ஒரு ஆறு ஓட்டத்தையும் எடுத்து சிறப்பாகஆடி 60ஓட்டங்களைப் பெற்றார். இந்திய அணியினர்ஆட்டமுடிவில் 7 விக்கட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை அணியினர் 7விக்கட்டுகள் இழப்புக்கு 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இலங்கை அணியின் சார்பில் பந்துவீசி செல்வி ஷெரீன் சமரசிங்க திறமையாக ஆடினர். இவர் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளைப் பெற்றார். செல்வி தியானிடி சொய்ஸா 14 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவரானார்.

இந்திய அணியின் சார்பில் பந்துவீசிய சுழற்பந்து வீச்சாளரான சுபாஸ்கனி குல்கார்னி 15 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைப் பெற்று அபாரமாக ஆடினர். (கி)

## சதாத் படுகொலை 270 பேர் விடுதலை

கெய்ரோ, செப் 2

எகிப்திய முன்னாள் ஜனாதிபதி ஜனப் அன்வர் சதாத்தின படுகொலையை அடுத்து கைது செய்யப்பட்டவர்களில் 270 பேர் நேற்று விடுதலைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக 2,000பேர் கைதுசெய்யப்பட்டனர் இவர்களில் 1?09 பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே. [வெ]

சிமெந்து தொழிற்சாலை: மூன்றும் கட்டம்

# தொழிலாளர்கள் திடீர் வேலைநீக்கம்?

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்டப் பிரிவில் கடமையாற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்கள் திடீர் ஆட்குறைப்புக் காரணமாக பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சார்பில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் இத்தொழிலாளர்கள் வரவு ஒழுங்கீனத்தின் அடிப்படையில் திடீர் ஆட்குறைப்புக்குள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

10 நாட்கள் தொடர்ந்து வேலைக்கு சமூகமளிக்காதுவிட்டால் பின்னர் வேலை வழங்க முடியாது என்று மறுக்கப்படுகின்றதாம். ஏராளமான தொழிலாளர்கள் இந்த ஆட்குறைப்புக்குட்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

இத்தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டுமெனவும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

## லெபனன் புனரமைப்புக்கு அமெ. 9 கோடிடாலர்உதவும்

வாஷிங்டன், செப், 3

இஸ்ரேலியர்களால் சின்னபின்னப்படுத்தப்பட்ட லெபனானைப் புனரமைக்க அமெரிக்கா உதவ முன்வந்துள்ளது.

இதற்காக 9கோடி டாலரை லெபனனுக்கு வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அண்மையில் சுமார் 2மாதங்களாக லெபனனில் உள்ள பாலஸ்தீன விடுதலை இயக்க நிலைகள் மீது இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலினால் லெபனனில் பல கட்டிடங்கள், ஆஸ்பத்திரிகள், வீடுகள், தொழிற்சாலைகள் ஆகியன சேதமுற்றது தெரிந்ததே. (இ)

## மன்னரில் தொழில் நுட்பக் கல்லூரி

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் தொழி நுட்பக்கல்லூரியொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டிட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேபோல் பெண்களுக்கு தையல், நடனம், கைப்பணி போன்றவற்றைக் கற்றுக் கொள்வதற்கு வசதியாகப் பாடசாலையொன்று அமைக்கப்படும்.

மன்னர் மாவட்ட அபிவிருத்திசபை:

## மேலும் 5 பேருக்கு புலமைப்பரிசில்கள்!

(மன்னர்)

மன்னர் மாவட்ட அபிவிருத்திசபையால் வழங்கப்படவுள்ள புலமைப்பரிசுத் திட்டத்தில் மேலும் 5 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதற்கான நிதி வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மன்னர்மாவட்ட அபிவிருத்திசபை கூட்டத்தில் உரையாற்றிய மன்னர் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. பி.எம். செபமாலை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் மன்னர் மாவட்ட அபிவிருத்தி சபையினல் வழங்கப்

(6 ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உயர்ந்த விஷயங்களை எளிய முறையில் கூறுவதே சால்பின் இலட்சணம்.

—எமர்சன்

## நமது நோக்கு

# நாடு அமைதி வாழ்வுக்கு அணிகலமா?

எங்களை நாமே புகழ்ந்து கொள்வது புத்திசாலித்தனமாகாது; அதே சமயம் வேற்று நாடுகளின் புகழ்ச்சிக்கு நாம் செவி சாய்ப்பது ஏமாற்றத்திலே முடியும்.

நாட்டின் நல்லாட்சி பற்றிப் பிரசாரம் நடத்தவேண்டிய கட்டாய நிலையிலும், இங்கு நிலவும் உண்மை நிலையை எடுத்துக் கூற அரசாங்கம் தயங்குவது பயனற்றது மட்டுமல்ல; தீங்கை வளர்க்குஞ் செயலாய் முடியும்.

கொலைகளும், கொள்ளைகளும் இவ்வருடத்தில் அதிகரித்திருப்பதை பொலிஸ் தலைமைக் காரியாலயம் புள்ளி விபரங்கள் வாயிலாக வெளியிட்டிருக்கிறது.

சென்ற வருடத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்த வருடம் எட்டு மாதங்கள் முடிவிலேயே குற்ற அதிகரிப்பு மோசமான நிலையை எட்டியிருக்கிறது.

வேற்று நாடுகளை ஒப்பிட்டுப் பார்த்து ஆறுதலடைவது அர்த்தமில்லாத வழக்கம். எம்முடைய பழமையை நினைந்து பரிதபிப்பதும் பயனற்றது.

கடந்தவருடம் ஆகஸ்ட் முடிவில் 588 கொலைகள் நடம்பெற்றன. இன்று 624. இத் தேதிக்குள் இன்னும் சில பதிவுக்கு வராமலிருக்கலாமென்று கருதப்படுகிறது. வழிப்பறிக் கொள்ளை வீதம் சென்ற வருடம் 31. இவ்வருடம் 75.

கொலைகள், கொள்ளைகள் பற்றிக் குறிப்பிடும்போது வடபகுதியை-குறிப்பாக யாழ்ப்பாணத்தை நாம் விசேட அக்கறையுடன் அவதானிக்க வேண்டியிருக்கிறது.

பயங்கரவாதம் என்ற போர்வையில் நடைபெறும் இவ்விரு அக்கிரமங்கள் யாழ்ப்பாணத்தில் குறைந்தபாடில்லை; அதிகரிப்பது அவசர நடவடிக்கைகளுக்கு உரியது

வடபகுதிமக்கள் பயங்கரவாதத்தை வெறுக்கிறார்கள் என்று கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரன் கூறியிருப்பது ஒரு புதினமல்ல; புதினமென்னவென்றால் அதனை எவ்வாறு அகற்ற முடியுமென்பதே; இதனை எதிர் பயங்கரவாதத்தினால் தடுக்கமுடியாதென்ற கருத்தையும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் வழங்கியிருப்பதால் நிலைமை பயங்கரமானது.

அரசியல் பயங்கரவாதம் மூலம் கொள்ளையர்கள், கொலைக்காரரர் பயங்கர ஆயுதமேந்தும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர் என்பது கண்கூடு. இரவில்மட்டுமல்ல பட்டப் பகலிலுமே ஆயுதந்தாங்கிய கோஷ்டிகள் யாழ்ப்பாணத்தைச் சூறையாடுகின்றன.

தாலிக்கொடிகள், பவுண் நகைகள் உள்ள வீடுகள் தப்பியிருப்பது பெரும் புதுமையாகப்போகும் நிலை]

கிழக்குப் பிராந்தியத்தில் அமைதியும் சமாதானவாழ்வும் நிலவவும், மக்கள்பாதுகாப்புடன் வாழ்வதை உறுதிசெய்ய சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகச் செய்தி.

இந்த வழியை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் அதிகரித்து வருகிறது.

ஜனாதிபதி தேர்தலிலும் பார்க்க மிக அவசரமான பொறுப்பு மக்கள் பாதுகாப்பே! இப்பகுதியில் பணப்புழக்கம் பெருகி வருவதும் இந்த நிலைமையை மோசமாக்குகின்றது.

உடனடி நிவாரணம் ஏதும் உண்டா?

# பத்து மாத பரந்தன் வேலைநிறுத்தம்

ஜனாதிபதி தேர்தல் நெருங்க பாக்கியாயுள்ள பரந்தன் வேலை நிறுத்தம் முடிவடையுமென எதிர்பார்க்கின்றோம்.

வேலை நிறுத்தத்தின் சரி பிழை பற்றி நாம் இப்பத்தியில் முன்பு குறிப்பிட்டிருந்தோம். கைத்தொழில் அமைச்சர் இதற்கெல்லாம் இலகுவில் காது கொடுப்பாரென்று நாம் நம்பி மோசம் போகவில்லை.

அரசாங்கமும் 'வேலை நிறுத்தம்' என்ற சத்தத்தையே சகிக்க முடியாதவாறு தீவிர நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது தெரிந்ததே.

போதிய காரணமில்லாமல், அரசியல் லாபங்களை ஆதாரமாகக் கொண்டு நடத்திய பல வேலை நிறுத்தங்கள் நாட்டின் பொருளாதாரத்தையும் மக்கள் தினசரிவாழ்வையும் பாழாக்கினது பழங்கதை.

இந்த அடிப்படையில் இந்த ஈரசு வேலை நிறுத்தங்கள் தலையெடுக்காது தடுக்க எடுத்த நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நாம் கண்டிக்க முற்படவில்லை.

பரந்தன் தொழிலாளர் தக்க காரணம் கொண்டு இறங்கிய வேலை நிறுத்தம் விரைவில் முடிவடையுமென்று நம்ப இடமிருந்தது அமைச்சின் பிடிவாதம் நாட்டின் ரசாயன உற்பத்திக்கு பங்கம் விளைத்தது. தேவையான பொருட்களை இறக்குமதி செய்யும் அளவிற்கு வேலை நிறுத்தத்தை உடைத்தெறியும் நோக்கமே மேலோங்கியது.

இன்று நிலைமை நெகிழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. பத்துமாதம் தொழிலாளர் சம்பளமில்லாமல் உயிர் வாழ்வதென்றால் கற்பனைக் கெட்டாத காரியம். ஒல்லாந்தில் வாழும் ஒரு தனி 'டச்' தொழிலாளி அனுதாபத்தின் பேரில் கொடையாக அனுப்பிய 75,000 ரூபாய் இதனை நன்கு விளக்குகின்றது இருந்தும் தொழிலாளிகளின் வாழ்வுக்கு பல லட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது.

அது அவ்வாறிருக்க தொழில் அமைச்சு வேலை நிறுத்தக்காரர்களை வேலைக்கு திருப்பும்படி அழைத்திருப்பதும், அவர்களுக்கு எவ்வித பழிவாங்கலும் நடைபெறுதென்ற உறுதிமொழியும் பத்திரிகைச் செய்திகள்!

மனிதாபிமான முறையிலாவது தொழிலாளிகள் அனைவரையும் வேலையில் அமர்த்தி நீண்டகாலம்இழுபறிப்படும்பிரச்னைக்குமுடிவு காண்பது இரு பகுதிக்கும் நன்மையில் முடியும்.

## மந்திகை ஆஸ்பத்திரி

# தாதி தாக்குதல் சம்பவம் சுமுகமாக தீர்க்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்ற தாதி தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட பிரச்னை சுமுகமாகத்தீர்த்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பகுதி நிர்வாக அதிகாரி திரு. பொ. இராசேந்திரம் கூட்டிய மகாநாடு ஒன்றில் இருபகுதியினரும் வைத்தியசாலையின் பொதுநலன் கருதி நடந்த சம்பவத்தை மறந்து ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கி ஒற்றுமையாக இருப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற இந்த மகாநாட்டிற்கு தலைமைவகித்து உரையாற்றிய திரு. இராசேந்திரம் ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டால்தான் பொதுமக்களுக்குச் சிறந்த வைத்திய சேவை ஆற்றமுடியும் என்பதை வலியுறுத்தினார்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இருவரும் நடந்த சம்பவங்களை மறந்து பரஸ்பரம் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் கடமை புரிவதாக இம்மகாநாட்டில் எழுத்துமூலம் உறுதி செய்தனர்.

தொழிற்சங்கப்பிரதிநிதிகளான திருவாளர்கள் என். மயில்வாகனம், ரி. கதிர்காமதாஸ், கே. நகேந்திரம் ஆகியோரும் மேற்படி மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

(பண்-நி-இ)

## ஜனாதிபதிலிங்கனின் நகைச்சுவை:

# பெரிய பதவிகளைத் தேடும் கழுதைகள்!

அமெரிக்க விவசாய வாக்காளர் ஒருவர் தன்னிடம்வந்த ஜனநாயக வேட்பாளருக்கு தனது வாக்கைத் தருவதாகச் சொன்னார்: 10 நிமிடங்களில் அங்கு வந்த குடியரசு வேட்பாளருக்கும் அதே வித வாக்குறுதி.

அவரைக்கண்டித்த மனைவிக்கு, ''அவர்கள் இருவரும் அடைந்த மகிழ்ச்சியை நீ பார்க்கவில்லையா?

''சரி இருவரையும் திருப்திப் படுத்திவிட்டேன், தேர்தல் தினத்தன்று என்னை திருப்திப் படுத்துவேன், அதன் பின் நாமெல்லோரும் மகிழ்ச்சியடையலாம்'' என்றாராம்.

★

ஜனாதிபதியின் பாரமான கடமைகளால் களைப்புத்தட்டுவதில்லையா?'' என்று ஒருவர் ஆபிரகாம் லிங்கனைக் கேட்டார்.

''ஆம் சிலவேளைகளில் மிகக் களைப்பாயிருக்கும். நகரை விட்டு என்னை வெளியே கொண்டுபோக றெயிலை பயன் படுத்துவார்கள். இந்தப்பதவிக்காக நான் கட்டுப்பட வேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் இறங்கி நடந்து விடுவேன்'' என்று விடையளித்தாராம்.

★

ஆபிரகாம் லிங்கனுக்கு வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி உபசாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவருடன் நெருங்கிய பழகிய நண்பர் தூரதேசத்திலிருந்து வந்தவர் அவருக்கு நேரில் கை கொடுக்க முடியவில்லையென்பதால், தொப்பியைஅசைத்து ''எங்கள் ஊரில் நிலவும் நம்பிக்கை ''அமெரிக்காவைபாதுகாப்பவர்கள் எங்கள் பரமபிதாவும் ஆபிரகாம்லிங்கனும் தான் என்றார்.

மகிழ்ச்சி ததும்ப லிங்கனும் தனது தொப்பியை அசைத்து நண்பா, நீர் சொல்வது அவரவாசி சரி'' என்று பதிலளித்தார்.

★

உள்ளூர்க்கலகங்களும் நெருக்கடிகளும் நிறைந்த காலத்தில் லிங்கன் விசனப்பட்டிருந்த வேளையில் அவருடைய நண்பர் ஒருவர் வெள்ளை மாளிகையில் லிங்கனுக்கு இரண்டு மணித்தியாலங்கள் விடாப்பிடியாக ஆலோசனைகள் வழங்கினாராம்! எவை அவசியம் செய்யவேண்டியவை, எவை அவசியம் தவிர்க்கவேண்டியவை என்பது பற்றி.

இவற்றையெல்லாம் பொறுமையுடன் கூர்ந்துகேட்ட ஜனாதிபதி, முடிவில் ''நண்பா உம்மிடம் எத்தனை நல்ல பசுக்கன்றுகள் உண்டு'' என்று கேட்டார்.

★

''மந்திரிமார் உருவானகதை தெரியுமா'' என்று கேட்டார் ஆபிரகாம் லிங்கன்.

'இல்லை' என்றார்கள் அவரிடம் உயர் பதவி தேடிவந்த அன்பர்கள்.

''சொல்கிறேன் கேளுங்கள். ஒருமுறை ஒரு அரசன் காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டார். 'மழை பெய்யுமா?' என்று மந்திரியைக் கேட்க, அவர் இல்லை என்றாராம். சிறுதூரம் செல்ல கழுதையில் ஏறிவந்த ஒரு கமக்காரன், அரசனைப் பார்த்து மழைவரும் என்று எச்சரித்தானும்; அரசன் அதை அசட்டை செய்துவிட்டுத் தொடர்ந்து தன் வேட்டையைஆரம்பிக்க, மழை சோனவாரியாகப் பெய்தது.

உடனே திரும்பிய அரசன் மந்திரியை வேலைநீக்கம்செய்து கமக்காரனை அழைத்தார்.

''உனக்குமழை பெய்யுமென எப்படித் தெரியும்''?

''மாட்சிமை தங்கிய மன்னரே! எனது கழுதை காதை நீட்டினால் மழை வருமென்பது அறிகுறி'' என்றான்.

''உடனே அரசன் அந்தக் கழுதையை மந்திரிப் பதவியில் வைத்தான். இதுதான் அரசியலில் முதலில் தொடங்கிய பெருந்தவறு!'' என்றாராம்.

''என்ன தவறு?'' என்று நின்றவர்கள் கேட்டார்கள்.

''ஏன்? இதற்குப் பிறகுதானே எந்தக் கழுதையும் பெரும் பதவியை தேடுகிறது'' என்று கூற ''நீங்கள் போய் வாருங்கள், நான் உங்கள் மனுக்களை பரிசீலனை செய்து, யுத்தம் முடிந்தவுடன் பதில் அனுப்புவேன்'' என்று அனுப்பி வைத்தார்கள்.

★

### ஹிட்லரின் மரணம்

நல்லாகப் பழகிய சோதிடர் ஒருவரை ஹிட்லர் கேட்டது; ''எந்த நாளில் எனது மரணம் நடைபெறும்?

சோதிடர்தனது ஆராய்ச்சிப் புத்தகங்களைப் புரட்டியபின் ''யூதர் விடுதலை தினம் ஒன்றில்'' என்று சொன்னாராம்.

'ஹிட்லர்மனங்கலங்கி எந்தத் தினம்?'' என்று மீண்டும் கேட்டாராம்.

''அது எனக்குத்தெரியாது'' என்றார் சோதிடர். கோபமுற்ற சர்வாதிகாரி; ''உனக்குத் தெரியவேண்டும். உண்மை பேசு'' என்று மிரட்டவே

''உண்மையில் எனக்கு எதென்று தெரியாது; ஆனால் நீங்கள் மரிக்கும் நாள் யூதர்களுக்கு விடுதலை நாளாகும்'' என்றாராம் சோதிடர்.

★

முசோலினியின் புகழ் பெருகிய காலத்தில், அவர் ஒருசிறு நகரில் வழிதவறி, அவருடைய மோட்டார் பழுதடைந்த காரணத்தால் தாமதிக்க வேண்டியிருந்தது. பொழுது போக்க அங்குள்ள சினிமா ஒன்றைப் பார்த்து ரசித்தாராம். அங்கு அவருடைய படம் திரையில் வந்தபோது எல்லோரும் எழுந்து மரியாதை செலுத்தினர்.

முசோலினி எழுந்திருக்கவில்லை முகாமையாளர் அவர் முன் வந்து அவருடைய தோளில் தட்டி, ''நீர் எழுந்து நிற்க வேண்டும்; எனக்கும் உம்மைப்

(5ம் பக்கம் பார்க்க)

## இன்றைய இசை நிகழ்ச்சிகள்

யாழ். ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி இசைப்பகுதியினர் நடாத்தும் 3வது ஆண்டு பத்துநாள் இசை விழாவின் 9 வது தினமாகிய இன்று சனிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

மாலை 6—6 30 மணி செல்விகள் ரி. சிராணி, எ சியாமா, சகோ. புனிதம் ஐயாத்துரை ஆகியோரின் வயலின் இசை.

மாலை 6 30—7மணி செல்விகள் எஸ். அனுஷா, என். வர்ணலாதேவி, ரி. சிராணி, ரி.செல்வராகினி, எஸ்.சாரதா பி சாந்தி, கே. யேஸி, என். மனோகரி பாடுவார்கள்.

இரவு 7—8 மணி வயலின் சோலோ: திரு. ஆர். இராதாகிருஷ்ணன் வயலின், செல்வன் எஸ். கோபிதாஸ் வயலின் திரு. ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கம், செல்வன் எம். சிதம்பரநாதன் கெஞ்சிரா, செல்வன் ஆர். ராஜு கடம், திரு. எஸ். இராசா மோர்சிங்.

இரவு8—9மணி திரு கே. கருணாகரன் பாட்டு, திரு வி.கே.குமாரசாமி வயலின், திரு பொன் ஆத்மானந்தா மிருதங்கம், செல்வன் பி. கிருபாகரன் கெஞ்சிரா.

## சமூகக்குறைபாடுகளை முற்றாக ஒழிக்க

# அரசியல் கலப்பற்ற சம்மேளனம் நிறுவப்படவேண்டும்

### சமூகமுன்னேற்ற கழகங் ளின் சமாசமகாநாடு தீர்மானம்

(அரியாலை)

''தமிழ் மக்கள் மத்தியில் நிலைபெற்றிருக்கும் சமூகக் குறைபாடுகளை முற்றாக ஒழித்துக் கட்டும் பொருட்டு உச்ச மட்டத்திலான சகல சமூக முற்போக்கு நிறுவனங்களையும் இணைத்து அரசியல் கலப்பற்ற ஒரு சம்மேளனம் நிறுவப்பட வேண்டுமென்றும், வரையப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் அச்சம்மேளனம் சமூகக் குறைபாடுகளை ஒழிப்பதையே குறிக்கோளாகக்கொண்டு செயல்பட வேண்டுமெனவும், இம்மகாநாடு உச்சமட்டத்திலானசகல சமூக முற்போச்கு நிறுவனங்களையும் கோருகிறது ''

இவ்வாறு கோரும்தீர்மானம் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் முதலாவது ஆண்டு விழாவில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி மகாநாட்டிற்கு சமாசத் தலைவர் திரு. இ. மு. நாகலிங்கம் தலைமை வகித்தார்.

இம்மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

''சமூகக் குறைபாட்டோடு தொடர்புடைய பிரச்னைகளை சிரமதானமுறையில் உடனுக்குடன் தீர்வுகாணும்பொருட்டு திட்டமிட்டமுறையில் சமூகக் குறைபாடுகளை ஒழித்துக்கட்டும் பொருட்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் தலைமையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைப் பிரதிநிதிகளையும், முற்போக்கு சமூக நிறுவனங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஓர் இணைப்புச்சபை நிறுவவேண்டும்.'

''ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் சமாசத்திஞல் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களைச் சமாதான நீதிபதிகளாக நியமிக்க வேண்டும்.''

''அமெரிக்க நாட்டின் உதவியுடன் அமுல்நடத்தப்படும் நாவற்குழிவரையிலான குழாய் நீர் விநியோகத் திட்டத்தை தச்சன்தோப்பு வரை விஸ்தரிக்க வேண்டும்.''

''குடியிருப்பு வசதியற்ற சமாச உறுப்பினர்களுக்கு பிரதம மந்திரியின் மாதிரிக் கிராமத் திட்டத்தில் வீடுகள் வழங்க வேண்டும்.''

''தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் சமூகக் குறைபாடுகளை வேரோடு களையும் செயல் யூகமாக நடைமுறையிலிருக்கும் குடிமைத் தொழில்முறையை முற்றாக ஒழிக்கவேண்டும்.''

''வசதியற்ற பிள்ளைகளின் கல்வி நிதி உதவி வழங்கும் பொருட்டு சமாசத்தால் நடத்தப்பட்டு வரும் கல்வி நிதியத்தை வரிவிலக்குரிமை பெற்ற ஒரு தர்மகர்த்தா நிதியமாகப் பதிவு செய்ய வேண்டும்.''

தீர்மானப் பிரதிகள், மகாநாட்டில் கலந்துகொண்ட பாராளுமன்றப்பிரதிநிதிகளிடமும், அரசாங்க அதிபரிடமும் கையளிக்கப்பட்டன.

---

## கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி எதிர்க்கட்சித்தலைவர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

இனத்தின் விடுதலையை நாடிநிற்கும் நாங்கள் எங்களுக்கென் ஸ்திரமான ஒரு பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் கூட்டுப்பன் முகப் பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள, யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனையைத் திறந்துவைத்துப் பேசுகையில் வலியுறுத்திஞர்.

கோப்பாய் எம். பி. யும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவருமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் இத்திறப்புவிழா நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அதிகவருவாயைப் பெருக்கிலந்த கூட்டுறவுத்துறை, இந்த அரசின் இறக்குமதிக் கொள்கையால் வெகுவாகப்பாதிப்படைந்துள்ளது. தனியார் துறையினருடன் கூட்டுறவு இயக்கம் போட்டிபோட்டு தங்கள் வருவாயை அதிகரிக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது இந்தநிலையில் வட பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள், பெருமைப்படுமளவுக்கு தென்னிலங்கையிலுள்ளவர்கள் பொருமைப்படுமளவுக்கு வெற்றிகரமாக வளர்ந்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் பாராட்டுகின்றேன். இதற்குக்காரணம், நெறியாளர்கள் தலைவர்கள் இளைஞர்களாக இருப்பதுதான்

இச்சங்கத்தின் தலைவர் ஆலாலசுந்தரம் தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. தலைவர் சிவமகாராஜா போன்றவர்கள் கடமை உணர்ச்சியுடன்செயல் பட்டுவருவது பாராட்டுக்குரியது. இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியில் இச்சங்கங்கள் தலைதூக்கிவருகின்றன.

ப. நோ. கூ. ச. ஊழியர்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படவேண்டும். (மா)

---

# மருதனைமடத்தில்கொள்ளையர் நடாத்திய 'திகில் நாடகம்'!

[யாழ்ப்பாணம்]

நள்ளிரவுக்குச் சற்றுமுன்னதாக ஆரம்பித்து, ஐந்துமணி நேரம் இடைவேளை எதுவுமின்றி மருதனைமடத்தில் நடந்த திகில் நிறைந்த 'நாடகம்' மெய்சிலிர்க்கவைக்கிறது.

இணுவில் ரயில்நிலைய வீதியிலுள்ள வீடொன்றில் 1 1/2 லட்சம் ரூபா பெறுமதியான கொள்ளையின்போதுதான் இந்தப் பயங்கர நாடகம் நடந்து முடிந்தது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆறுமுகம், அவரது மனைவி ஓய்வுபெற்ற ஆசிரியை சரஸ்வதி ஆறுமுகம் தம்பதிகளின் வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தக் கொள்ளை நடந்தது.

இரவு பதினெரு மணிக்கு வீட்டு வாசலிருந்து ஒரு குரல் கேட்டது. 'டீச்சர் ஏன் இன்னும் படுகையில்லையோ?' என்ற போது, 'பிள்ளைகள் படிக்சுக் கொண்டிருக்கிருர்கள். அதோடை கள்ளர் பயமும்! அதனுல்தான் இருக்கிறம்' என்று வீட்டு எஜமானி சரஸ்வதி உள்ளிருந்து பதில் கூறினூர்.

'நாங்களும் கள்ளர்தான் வந்திருக்கிரேரும்' என்று சொன்னபோது, 'பகிடிக்கதைகள் விடாதேயுங்கோ!' என்று பதில் சொன்னூர் சரஸ்வதி.

இதற்குள் பத்துப் பதினைந்து பேர் அங்கும் இங்கும் ஓடும் சத்தம் கேட்டது. ஒருவர் திடீரென மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கும் சத்தம் கேட்டது.

வாசல் கதவு பூட்டப்பட்டிருந்ததால், கதவைத்திறவுங்கோடா!' என்ற உரத்த குரல் உத்தரவுபோட்டது.

வீட்டுக்குள்ளே இருந்தவர்களுக்கெல்லாம் 'விஷயம்' விளங்கத் தொடங்கிவிட்டது.

வாசல் கதவு திறக்கப்பட்டது. பத்துப்பேர் ஒருவர் தலைமையில் உள்ளே நுழைந்தனர். அவர்கள் கையில் சுழல் துப்பாக்கி, வாள், கோடாலி.

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆறுமுகமும் அவரது ஆண்பிள்ளைகள் இருவரும், மருமகனும் ஒரு அறைக்குள் துப்பாக்கி முனையில் பூட்டப்பட்டனர். மற்றெரு அறையில் ஏஜமானியும், அவரது திருமணமான பெண்ணும், மற்றும் மூன்று குமர் பெண்களும் பூட்டப்பட்டனர்.

பூட்டப்பட்ட பெண்கள் அறையில் இருவரும், ஆண்கள் அறையில் இருவரும் துப்பாக்கி முனையில் நடுநடுங்கவைத்துக் கொண்டிருந்தனர்.

மற்றைய அறைகளில் இவ்விருவர் சோதனை நடத்திக் கொண்டிருந்தனர்!

''நகைகள் ஒன்றுமில்லை'' என்று சரஸ்வதி சொன்ஞர். ''கிட்டடியில் நடந்த கலியாண வீட்டுக்கு, கழுத்தும், கையும், காதும் முட்ட முட்ட நகைகள் போட்டுக்கொண்டு போனீர்களே! எங்கேயெல்லாம் அவை?'' என்று பெண்கள் அறையில் அதட்டல் ஒலி.

அதற்குள் 'செற்றி' உடைத்து நொருக்கப்பட்டு, தாலிக்கொடி ஒன்றும் சில நகைகளும் எடுக்கப்பட்டன.

இதேபோன்று வீட்டின் முக்கிய பகுதிகள் கோடரியால் பதம்பார்க்கப்பட்டு, வைரத் தோடுகள், மற்றும் சில நகைகளை எடுத்தார்கள்.

கடிதங்கள், தஜ்தாவேஜுகளைச் அங்குமிங்குமாக எடுத்துப் படித்துக்கொண்டிருந்தார்கள். சவூதியிலிருந்து ஒரு மகன் அனுப்பியபணம் சம்பந்தமான தகவல்களைப் பெற்றவர்கள் தாய் சரஸ்வதியிடம், 'இந்தப்பணம் எங்கே? ஏன் எடுத்தீர்கள்? என்ன நடந்தது' என்ற கேள்விகளை ஒருவர் சரஸ்வதியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

''ஒரு சதமும் கையில் இல்லை'' என்ற பதிலைச்சொன்னதும், இன்னெருவர் 2 00 ரூபா பணத்தை எங்கேயோ எடுத்துகொண்டுவந்து ''இதுவரையில் தானே இருந்தது. இன்னும் எங்கே இருக்கிறது? என்று கேட்டார்.

அந்தக் கொள்ளைக் கோஷ்டியில் பத்துவயதுப் பையனும் வயோதிபக் கிழவனும் அங்கு வந்திருந்தனர்.

''அம்மா! அவர்கள் பொல்லாதவன்கள்! இருக்கிறதைக் கொடுங்கள்'' என்று அந்த அரைக் காற்சட்டைப் பையன் அந்த எஜமானியிடம் சொல்கிருன்.

கிழவனும் அப்படியே சொல்கிருர்.

இது ஒருபுதுவித கொள்ளை!

''உன்ரை ஜி.ஸி.ஈ. (உயர்தர) பத்திரங்களைக் கிழித்தெறியப் போகிறன்! எங்கே உன் நகைகள் என்று சொல்லு? —இப்படி ஒரு சிறுமியை ஒரு ஆணவக்குரல் வெருட்டியது.

காலில் விழுந்து அச்சிறுமி அழுகிருள். ''எனக்கு ஒன்றும் தெரியாது'' என்கிருள். துப்பாக்கியால் ஒரே அடி! மயங்கி விழுகிருள். அதுமட்டுமல்ல! ஒரு போத்தலில் இருந்த மண்எண்ணையை அச்சிறுமி முகத்தில் ஊற்றுகிருன் ஒருவன்.

தாலிக்கொடிகள் இரண்டு வைரத்தோடுகள், நகைகள், சைக்கிள், தையல் மெஷின், கூறைச் சேலைகள், ரொக்கப்பணம் எல்லாவற்றையும் கட்டிக் காவிக்கொண்டு கொள்ளையர்கள் அதிகாலை 4–30 மணிக்குப் புறப்படுகிருர்கள். வீட்டிலிருந்த முட்டைகளை உடைத்து கொள்ளையர்கள் அடிக்கடி உள்ளங்கைகளில் பூசிக் கொண்டார்கள். கையடையாளத்தை மறைக்கவாக இருக்கலாமென்றுபொலிசார் சந்தேகித்தார்கள்,

சுன்னுகம் பொலிசில் தெரிவிக்கப்பட்ட புகார்களிலிருந்து மேற்கண்ட தகவல்கள் தெரிய வந்தன.

---

## சங்கானை பொலிஸ் நிலையத்தை மீண்டும் திறக்க கோரிக்கை

[சுழிபுரம்]

பொது மக்கள் நன்மைகருதி மீண்டும் சங்கானை பொலிஸ் நிலையத்தை திறக்குமாறு கோரும் தீர்மானம் சுழிபுரம் கிழக்கு கிராமோதய சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

களவுகள் சச்சரவுகள் சம்பந்தமான புகாரைத் தெரிவிக்க பல மைல் தூரத்திலுள்ள காங்கேசன்துறை பொலிஸ் நிலயத்திற்கு செல்ல வேண்டியுள்ளதை சுட்டிக்காட்டி பொலிஸ் மா அதிபருக்கும், அரசாங்க அதிபருக்கும் தீர்மானப் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சுழிபுரம் கிழக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு மு. சிவராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பொலிஸ் நிலையம் சங்கானையில் செயல்பட்ட காலத்தில் குற்றச் செயல்கள் இடம் பெற்ருலும் மிகத் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தமையும் தற்போது அந்த நிலைமை இல்லை என்பதுவும் சுட்டிக் காட்டப்பட்டது.

---

## வள்ளுவர் சமூகம் கோரிக்கை

[அரியாலை]

விகிதாசார முறையில் நடைபெறவிருக்கும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வள்ளுவ சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்றப் பிரதிநிதியாக வர வாய்ப்பளிக்கும்படி சோரி அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைப் பொதுச் செயலாளர் மகாசபையின் சார்பில் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாநாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கும், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்திற்கும் வேண்டுவிடுத்துள்ளார்.

---

## ஒழுங்குகட்டுப்பாட்டைநிலவச்செய்யவே

# கிராமசேவை அலுவலருக்கு அதிக அதிகாரங்கள்

### பயிற்சி வகுப்பில் ஏ. ஜி. ஏ. உரை

(புலோலி)

''மக்கள் மத்தியில் ஒழுங்கு, கட்டுப்பாடு, அமைதி என்பனவற்றை நிலவச் செய்வதற்காக கிராமசேவை அலுவலர்களுக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராமசேவை அலுவலர்களின் ஒத்துழைப்பு, இன்றைய நிலையில் மிகமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருத்திற்கொண்டு கிராமசேவை அலுவலர்கள் செயற்படவேண்டும்.

இவ்வாறு வடமராட்சிப் பகுதி கிராமசேவை அலுவலர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பற்றிக் குறிப்பிட்டார். வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இப் பயிற்சிவகுப்பில் தொடர்ந்து உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிட்டதாவது.

யாழ். மாவட்டத்தின் இன்றைய நிலையைப் பயன்படுத்தி சிலர் வழிப்பறி திருட்டுப் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். கிராமசேவை அலுவலர்கள் பொதுமக்களின் பிரச்னைகளை பொறுமையுடனும், நிதானத்துடனும் ஆராய்ந்து அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி பிரச்னைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராமசேவை அலுவலர்கள் தமது அன்றாட சேவைகளைத் தினக்குறிப்புப் புத்தகத்தில் பதிந்துகொள்ள வேண்டும். கிடைக்கும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்ப வேண்டும். பணிகளை ஒழுங்காகச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். உங்கள் சேவைகளை நாடிவரும் மக்களுக்கு மதிப்பளித்து சேவை மனப்பான்மையுடன் நீங்கள் செயற்படும் போது அவர்களுக்கும் உங்களுக்கும் பெரு நன்மையேற்படும்

[இ]

---

## பெரிய...

(–4ம் பக்கத் தொடர்ச்சி)

போல எழும்ப விருப்பமில்லை; ஆனுல் இவர் சர்வாதிகாரியானபடியால், இது அவமரியாதையென்று தண்டனை ஏற்படலாம்'' என்ருராம்.

தொகுத்தவர்:

சபாலிங்கன்

---

## ஆண்டுநிறைவும் பாரதி நூற்றுண்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு பாரதி சனசமூக நிலையத்தின் 23 வது ஆண்டு விழாவும், பாரதி நூற்ருண்டு விழாவும் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட விருக்கின்றன.

பாரதிசனசமூக நிலையமைதானத்தில் இடம் பெறவுள்ள இக் கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு நிலையத்தலைவர் திரு. ஆ. செல்வரட்ணம் தலைமை தாங்குவார்.

பிரதமவிருந்தினராக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், சிறபபு விருந்தினராக யாழ். பாராளுமன்ற உறுப்பினர் திரு. வே. யோகேஸ்வரனும் கலந்துகொள்வார்கள்.

இவ்விழாக்களை யொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ருேருக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்குவார் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ)

வடபகுதிக்கு வரவிருந்த

# பொலிஸாரின் இடமாற்றம் இறுதிநேரத்தில் ரத்து!

[மாவிட்டபுரம்]
வடபகுதிக்கு இடமாற்றம் பெற்று வரவிருந்த பொலிசாரில் அநேகரின் இடமாற்றம் இறுதிநேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வடபகுதியில் ஒருவருடம் கடமையாற்றினுல் இடமாற்றம் கோரலாம் என்ற சலுகைத்திட்டத்தின் கீழ் வடபகுதியிலிருந்து பொலிசார் இடமாற்றம் பெற்றுச் செல்வதையடுத்து வேறு இடங்களிலிருந்து வடபகுதிக்கு பொலிசார் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 1ம் திகதி இப்பொலிசார் வடபகுதிக்கு வந்து கடமையாற்ற வேண்டியிருந்த போதும் அவர்களில் அநேகர் வரவில்லை. அவர்களில் பலரது இடமாற்றங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது குறித்து வடபகுதி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களப் பொலிசார் மட்டுமன்றி தமிழ் பொலிசாரும் வடபகுதிக்குவரதயக்கம் காட்டுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் காலியாகவுள்ள பொலிசாரின் இடங்களை கூடியகெதியில் நிரப்ப பொலிஸ் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். சங்கீதம் முதலாம், இரண்டாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்பாடுகின்றன.

### மூன்றும் பகுதி
### திருகோணமலை
முதலாம் பிரிவு

0 ஜக்குலின் சுகந்தினி பேரின்பநாயகம் பாட்டு, 0 சிவனேஸ்வரி சிவமூர்த்தி பாட்டு, 0 f விஜயலோஜினி பத்மநாதன் பாட்டு, 0 f கோகிலராணி இரத்தினசிங்கம் பாட்டு 0 f தக்ஷாயினி இன்பரட்ணம் பாட்டு, மதிவாணி சண்முகநாதன் [மே பா] வயலின், மதிவதனி சண்முகநாதன் [மே பா] வயலின், 0 வைஜயந்தி கணேசலிங்கம் பாட்டு, 0 கீதாஞ்சலி திருச்செல்வம் பாட்டு, 0 f சுகிதாஞ்சலி பத்மநாதன் பாட்டு, 0 ஸ்ரீதேவி இராசையா வயலின், சிவநேசமலர் பஞ்சலிங்கம் பாட்டு வேணுகாதேவி மயில்வாகனம் பிள்ளை வயலின், f அகிலநாயகி கணபதிப்பிள்ளை பாட்டு, 0 ரேணுகா லோகானந்தம் பாட்டு, வீணை. 0 வதனு ஸ்ரீரங்கநாதன் பாட்டு, 0 f வதனு ஸ்ரீரங்கநாதன் வீணை, 0 f யசோதா ஏகாம்பரம் பாட்டு, 0 சஜனியா சச்சிதானந்தம் வீணை, f மகேந்திரன் கோகுலன் பாட்டு.

இரண்டாம் பிரிவு

பிரேபாஷினி சவிராஜா பாட்டு, 0 கீதா நவரட்ணராஜா பாட்டு, f ஜெகசோதிமலர் பஞ்சலிங்கம் பாட்டு, வாசுகி குமாரசாமி வீணை, 0 மரியனி தங்கராசா வீணை, இன்பரூபி புண்ணியமூர்த்தி வீணை.

சாதாரண சித்தி

தவலோஜினி தவராஜா பாட்டு. யூபபிறேசியா ஜோய் ஒக்கஸ் பாட்டு, நித்தியகலா குலதிலகரட்ணம் பாட்டு, சாந்தகுமாரி கதிர்காமதாசன் பாட்டு, சுமதி இராசலிங்கம் பாட்டு, மெலனி தங்கராசா பாட்டு.

மட்டக்களப்பு
முதலாம் பிரிவு

0 ராகிகா இரட்ணசபாதி பாட்டு, 0 விஜயகுமாரி சித்திரவேலு வீணை, 0 குமுதினி இராஜரட்ணம் வீணை, 0 கோகிலப்பிரியா கனகசபை பாட்டு.

### மூன்றும் பகுதி
### மட்டக்களப்பு
இரண்டாம் பிரிவு

சுமதி ஸ்ரீஸ்கந்தராஜா பாட்டு, ஜூலியாதிலினி அந்தோனிமுத்து பாட்டு, புவனேஸ்வரி சதாசிவம் பாட்டு, தயாளினி கதிர்காமத்தம்பி பாட்டு, இந்துமதி மகாலிங்கம் வீணை, சுமித்ரா நடராஜன் வீணை.

சாதாரண சித்தி

கங்கா குணரெட்ணம் பாட்டு, நளாயினி வேலுப்பிள்ளை பாட்டு, கயல்விழி பூபாலரட்ணம் பாட்டு, ரஜனி கனகசபாபதி வயலின், ஜெயதேவி தம்பியப்பா பாட்டு, விஜயராணி பூபாலசிங்கம் வீணை, எமி கிருபைராசா வயலின், சுமதி சண்முகலிங்கம் பாட்டு, லக்ஷ்மி சரவணமுத்து பாட்டு.

[7ம் பக்கம் பார்க்க]

## நாடு திரும்பியதும் விசாரணை

(கரவெட்டி)
கரவெட்டியிலுள்ள தமிழ் ஈழ விடுதலை அணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இரகசியப் பொலிசாரினுல் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறார்.

பிரஸ்தாப இளைஞர் இந்தியா சென்றிருப்பதால் அவர் நாடு திரும்பியதும் பொலிசாரினுல் விசாரிக்கப்படுவார். என்று தெரியவருகிறது.

## இன்ஸ்பெக்டர்குமார் கொலைச்சம்பவம்:

# இளைஞனை விடுதலை செய்யக் கோரி மனுதாக்கல்

(புலோலி)
வல்வெட்டித்துறைச் சந்தியில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட முன்னுள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமார் கொலைச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்து யாழ். மேல் நீதிமன்றத்திலுல் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட சந்தேகநபரான இளைஞனை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

முன்னுள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரினுல் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றத்திலுல் பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டிருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். நடராசா (குட்டித்துரை) என்ற இளைஞனை விடுதலை செய்யுமாறு கோரியே சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்தார்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பாக மேலும் மூவருக்கெதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நடராசா என்ற சந்தேக நபரான இளைஞனை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி இரத்தினசிங்கம் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் இச்சந்தேக நபரான வாலிபர் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிசாரிடமிருந்து அறிக்கை பெற்றுக்கொண்ட பின்னரே இவ்வாலிபரை விடுதலை செய்வது பற்றித் தீர்மானிக்கப்படுமென அறிவித்தார்.

## ஐ. நாணய சங்கத்தின் புதிய தலைவர்

(யாழ்ப்பாணம்)
யாழ். அரசாங்க செயலகத்தில் கடமையாற்றி அண்மையில் ஒய்வு பெற்ற 'சமூகரத்தினம்' திரு. எம். கே. இளையப்பு கோப்பாய் சூரியோதய ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கோப்பாய்சூரியோதய சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம். கோப்பாய் தெற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம், வலி கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசம், அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபை, அகில இலங்கை காந்திய சேவா சங்கம் ஆகிய பல சமூக சேவை நிறுவனங்களிலும் முக்கிய உறுப்பினராக இருந்து செலாற்றி வருகிறார்.

(இ)

கடந்த ஆண்டைவிட

# கொலைகளும், வழிப்பறிக் கொள்ளைகளும் அதிகரிப்பு!

[கொழும்பு]
இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஆகஸ்ட் மாதம்வரை நாட்டின் 30 பொலிஸ் தலைமையகங்கள் 624 கொலைச்சம்பவங்களைப் பதிவுசெய்துள்ளன கடந்த ஆண்டில் இதே அளவு சாலப்பகுதியில் 586 கொலைச்சம்பவங்கள் மட்டுமே பதியப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டைப்பார்க்கிலும் 38 சம்பவங்கள் அதிகரித்துள்ளமை இந்த ஆண்டின் பதிவுகளிலிருந்து தெரியவருகின்றது. சில பொலிஸ் தலைமையகங்கள் தமது பதிவுகளை அனுப்பிவைப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்துவதால் மேலும் பல கொலைச்சம்பவங்கள் நடந்துள்ளபோதிலும் அவற்றையும் தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையில் சேர்த்துக்கொள்ளமுடியாதிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெருஞ்சாலைக் கொள்ளைகளும் கணிசமானளவு அதிகரித்துள்ளன. கடந்த ஆண்டு இக்கொள்ளைகள் 31ஆக இருந்தன. இவ்வாண்டில் இவை 75 என்றுதெரிவிக்கப்பட்டது. [கி]

## இடமாற்றம்

(கரவெட்டி
யாழ். புனித மரியன்னை பேராலய உதவி பங்குத்தந்தை அருட். திரு. ஞான ஆனந்தன் அடிகளார் இரணைதீவுற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு அண்மையில் குருவாக திருநிலைப் படுத்தப் பட்ட அருட். திரு. கிருபாகரன் அடிகளார் நியமிக்கப் பட்டு இருக்கிறார்.

## வீதியில்நின்று

# மதுபோதையில் கலாட்டா செய்தவருக்கு அபராதம்!

(புலோலி)
மதுபோதையில் வீதியில் நின்று போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த நபரொருவரைக் கடுமையாக எச்சரித்த பருத்தித்துறை நீதவான் திரு வி பி சுந்தரலிங்கம் 50 ரூபா அபராதம் விதித்தார்.

நீதிபதிவழக்குச்சம்பந்தமாக இடமொன்று பார்வையிடுவதற்குச் சென்று கொண்டிருந்த போது மந்திகையிலுள்ள வீதியில் அ. செல்வரத்தினமென்பவர் மதுபோதையில் நின்று பிரயாணிகளின் போக்குவரத்திற்கு இடையூறு விழைவித்தாராம்.

மதுபோதையில் நின்ற இவரை நீதிமன்றப்பொலிஸ் உத்தியோகத்தர் திரு. இராசரத்தினம் கைதுசெய்து நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தார். சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். கடுமையாக எச்சரித்த நீதவான் 50 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## மேலும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

படும் புலமைப்பரிசில் திட்டத்தில் சேர்ந்து கொள்ளவென மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றன. புலமைப்பரிசில் பெறும் மாணவர்களை தெரிவு செய்யவென ஒரு குழு அமைக்கப்படுள்ளது. இக்குழு இவ்வருடம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து 5 மாணவர்களைப் புலமைப் பரிசில் பெறுவதற்காகத் தெரிவு செய்யும்.

## இல்ல விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)
குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் விளையாட்டுக் கழக ஐந்தாவது வருட இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் ஐந்தாந்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. விளையாட்டுப் போட்டிகள் கேணியடி மைதானத்தில் மாலை இரண்டு மணிக்கு ஆரம்பமாகும்.

இப்போட்டியில் பொறியியலாளர் திரு. செ. புவிராசசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர். திரு எவ். கே. எல். ஹெட்டி ஆராய்ச்சி கலந்துகொள்வார். (கி)

## நாட்டியாலயா 10வது கலைவிழா

[யாழ்ப்பாணம்]
மானிப்பாய் நாட்டியாலயாவின் 10வது கலைவிழா இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். எம் பி. திரு. வி. யோகேஸ்வரன் பிரதம அதியாகக் கலந்துகொள்வார். [இ]

திருமணம் - ருதுசாந்தி
புதுமனை புகுவிழா - இன்னோரன்ன
மங்கள வைபவங்கள்
வீடியோபடப் பிடிப்புக்கு
வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன், யாழ்ப்பாணம்.

# ஆழிக்குமரனின் தமிழ்நாடு

## சாதனை 'கின்னஸ்' புத்தகத்தில்!

[யாழ்ப்பாணம்]

இங்கிலாந்திலிருந்து வெளியிடப்படும் உலக சாதனைகளையும், அவற்றைப் புரிந்தோரையும் பற்றிய விபரங்களைத் தரும் 'கின்னஸ்' நூலின் இவ்வாண்டுக்கான பதிப்பில் ஆழிக்குமரன் திரு. வீ. எஸ். குமார் ஆனந்தனின் அதிகநேரம் நீரில் மிதந்த சாதனையும் இடம் பெறுகின்றனது. இந்தச் சாதனையை இவர் சென்னையில் சடந்த ஆண்டு நிலைநாட்டினார்.

'கின்னஸ்' புத்தகத்தின் விளையாட்டுச் சாதனைகளுக்குப் பொறுப்பான விளையாட்டுத் துறை உதவி ஆசிரியரான திருமதி பி. வெயிட்ஸ் என்பவரே ஆனந்தனின் இந்த சாதனை இடம்பெறவிருப்பதை அவருக்கு அறிவித்து தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

ஆனந்தனின் சாதனையுடன் வெளிவரவுள்ள இவ்வாண்டுக்கான கின்னஸ் புத்தகம், இப்புத்தக வெளியீட்டுத் தொடரில் 29-வது வெளியீடாகும். இதன் பெறுமதி இங்கிலாந்து நாணயத்தில் ஐந்து பவுண்களும், 75 பென்சுகளுமாகும். எதிர்வரும் அக்டோபர் 15-ம் திகதியே இந்நூல் வெளியிடப்படும்.

முக்கியமளிக்கப்படுவனவற்றைப் பிரசுரிப்பதற்கு 'ஸ்டொப் பிரெஸ்' என்ற ஆங்கிலத் தலைப்பில் ஒதுக்கப்படும் பகுதியிலேயே ஆனந்தனின் சாதனை குறிப்பிடப்பட்டுள்ளது. [கி]

## ஏஜன்ஸியால் ஏமாற்றப்பட்டவர்

## சுருக்கிட்டுத் தற்கொலை!

(புலோலி)

வெளிநாடு செல்வதற்காக ஏஜன்ஸியிடம் 15,000 ரூபா பணம்கொடுத்து ஏஜன்சியால் ஏமாற்றப்பட்ட வாலிபரொருவர் மனமுடைந்து ஆனைவிழுந்தான் மயானத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த சின்னத்துரை விஞயகமூர்த்தி [வயது 25] என்ற வாலிபரே சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது மரணவிசாரணைகளைத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வயிரமுத்து மேற்கொண்டார். தும்பளை கிராமசேவை அலுவலர் திரு. வி. சேதுநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவரின் தந்தையான சின்னத்துரை வயது 56] சாட்சியமளிக்கையில், ''இறந்தவர் எனது மகன். இவர் வெளிநாடு செல்வதற்காக ஏஜன்சி ஒருவரிடம் 15,000 ரூபா பணம் கொடுத்திருந்தார். ஆனால் அந் ஏஜன்சி ஏமாற்றிவிட்டார் இவரிடமிருந்து கொடுத்தபணத்தில் 5,000 ரூபா மீட்கப்பட்டது. மிகுதி 10 000 ரூபாவையும் அவர் திருப்பித் தரவில்லை. இதனால் இறந்தவர் மனமுடைந்து காணப்பட்டார்.''

மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனை செய்து சாட்சியமளிக்கையில் கழுத்து இறுகுப்பட்டு மூச்சுத்திணறியபடியால் மரணம் சம்பவித்துள்ளதெனக் குறிப்பிட்டார். மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## வடஇலங்கை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

**யாழ்ப்பாணம்**

முதலாம் பிரிவு

0 வாசுகி இராசநாயகம் பாட்டு, 0 ஜோய்ஸ் சுதர்சினி பரராஜசிங்கம் வீணை, 0 டவித்திரா கைலாசபதி வீணை, 0 மஞ்சுளா அருணசலம் பாட்டு, 0 மல்லிகா வேணுகோபால்பாட்டு.0 றெடெம்ரா யூட்சி ஆசீர்வாதம் பாட்டு' 0 ஞானமொழி யோகநாதன் வீணை, 0 அருள்மொழி யோகநாதன் வீணை, 0 சுமங்களா கைலாசபதி வீணை, 0 சுகந்தி தியாகராஜா பாட்டு, வீணை,

**மூன்றும் பகுதி**

**யாழ்ப்பாணம்**

முதலாம் பிரிவு

கேஷினி சிப்பிரியா டாஸ் (மே பா) புல்லாங்குழல், 0 பத்மநாதன் சுகந்தன் புல்லாங்குழல், 0 துளசி அன்னலிங்கம் வீணை, திலகசக்தி முத்துக்குமாரசாமி [மே பா] பாட்டு, மதனகரன் தயாபரன் புல்லாங்குழல் 0 சோபனு குகதாசன் வயலின் 0 வனிதா தர்மலிங்கம் வீணை, 0 மேரிலதா சிவகுரு வயலின், 0 ஸ்ரீசாந்தினி நவரத்தினம் வீணை.

இரண்டாம் பிரிவு

f வாசுகி முருகமூர்த்தி பாட்டு, கிருசியா குரூஸ் இமனுவேல் பாட்டு, ஸ்ரீகௌரி கந்தையா [மே பா) வீணை, செல்வமனோகரி திருச்செல்வம் பாட்டு, 0 நந்தினி சோமசுந்திரம் பாட்டு, 0 நிரஞ்சனி வாமதேவன் பாட்டு,வயலின், 0 செல்வசக்தி செல்வரட்ணம் பாட்டு, 0 மாலினி குலசிங்கம் பாட்டு, 0 விவேகவதி இராமசுவாமி பாட்டு, இரத்தினம் உதயகுமார் பாட்டு, 0 வினோதினி சண்முகலிங்கம் பாட்டு, வீணை, 0 பஞ்சுளா பஞ்சாட்சரசர்மா பாட்டு, 0 சுதர்சினி துரைத்தினம் பாட்டு, லிங்கேஸ்வரி காசிப்பிள்ளை பாட்டு, வாசுகி திருஞானசுந்தரம் வீணை, 0 ஸ்ரீர்ஞ்சனி விநாயகமூர்த்தி வீணை, தேவிகா இராமநாதன் வீணை, யோகு பசுபதி யோகசங்கர் பாட்டு, அமுதா தியாகராஜா பாட்டு, வீணை, கீதா கதிர்காமநாதன் பாட்டு, 0 சுமதி பொன்னம்பலம் பாட்டு, மங்களகௌரி கனகரத்தினம் பாட்டு, துரைராஜா நித்தியானந்தன் வீணை

[ 0 சாஸ்திர பரீட்சையில் விசேஷ சித்தி ]

[ f செய்முறைப் பரீட்சையில் விசேஷ சித்தி.)

(தொடரும்)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

## வலுவிழந்தோருக்கு ஆற்றும் பணிகள்

### மாவட்ட நீதிபதி பாராட்டு

[சாவகச்சேரி]

''சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வலுவிழந்தோருக்காக ஒருசிறந்த பணியை மேற்கொண்டுள்ளார்கள். இதற்கு எல்லோரும் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து இதை வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டும்''

வலுவிழந்தோர் இல்ல நிதிக்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடாத்தும் பொருட்காட்சியையும் களியாட்ட விழாவையும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்த சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச் காரியப்பர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் லயன்ஸ் கழகத் தலைவரும் சட்டத்தரணியுமான செ. அப்பிகைபாலன் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் நீதிபதி காரியப்பர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

நாம் வாழ்நாளில் செய்யும் சேவைகள், தர்மங்கள் எல்லாவற்றிலும் மகத்தானது, வலுவிழந்தோருக்காகச் செய்யும் சேவையே. எனவே இப்பகுதி மக்கள் எல்லோரும் இப்புனிதமான பணியில் ஈடுபட்டு இச் காட்சிகளைக் கண்டு ரசிப்பதோடு வலுவிழ்ந்தோரையும் வாழ வழிசெய்வது பாராட்டப்படக் கூடியதொன்றுகும் என்றூர்.

லயன்ஸ் கழகத் தலைவர் தமது ஆரம்பவுரையில்:

சென்ற ஆண்டு ஐப்பசி தொடக்கம் எங்கள் சழகம் 2 வலுவிழந்தவர்களை வைத்துப் பராமரித்து வருகிறது. அவர்களது வாழ்வு சிறக்க அவர்களுக்கென இல்லம் அமைப்பதற்காக இக் கண்காட்சியையும் களியாட்ட விழாவையும் ஆரம்பித்துள்ளோம் இன்றைய விழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகைதந்த நீதிபதி ஜனும் காரியப்பரையும் திருமதி காரியப்பரையும் பாராட்டுவதோடு திரளாக குழுமியிருக்கும் எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி பிரதேச அபிவிருத்திசபைத் தலைவர் திரு. கா. வே. முத்துக்குமாரசாமியும் பேசினூர்.

## சமாதான நீதிவாஞக நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நீதி நிருவாகத்துக்குட்பட்ட பிரதேசத்தின் சமாதான நீதிவாஞக திரு. கே. வி. பி வேலாயுத பிள்ளை நீதியமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்திஞவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கே. வி. பி. வேலாயுதபிள்ளை தமது சமாதான நீதவான் பதவியை கடந்த முதலாந் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பெற்றுக்கொண்டார். அன்றையதினம் சாவகச்சேரி நீதிமன்ற அலுவலர்களும், சட்டத்தரணிகளும் இவருக்கு மாலைகள் அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

திரு. வேலாயுதபிள்ளை கடந்த 25 வருடங்களாக இலங்கையிலுள்ள பல நீதிமன்றங்களில் சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் முதலியாராகப் பணியாற்றினூர்.

சாவகச்சேரி தொகுதியின் கொடிகாமம் ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளராக இருக்கும் இவர் இக்கட்சியின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி வருகின்றூர். [கி]

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை மேற்கு ஐயனூர் கோவிலடி சர்வசக்தி ஸ்ரீ மங்கள மஹாகாளி அம்பாள் ஆலய பாலஸ்தாபனம் இம்மாதம் ஆறாந் திகதி திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு இடம் பெறும். (கி)

## ஆராதனைகள் நிறுத்தம்

(கரவெட்டி)

கரவெட்டி பரலோகமாதா தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஆராதனைகள், திருச்சடங்குகள் ஆகியன தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இத்தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் அண்மையில் நடைபெற்றபோது ஆலயக் கதவைத் திறந்து வைப்பதில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்தே திருப்பலிப்பூசை ஆராதனைகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன.


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

120 வது வெற்றித் திருநாளாக
மனோகரா (யாழ்ப்பாணம்) 8-9-82 வரை
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

றீகல் [யாழ். நகர்]
Daily 5 Shows
JIM BROWN
JIM KELLY IN
THREE THE HARDWAY

சாந்தி [யாழ். நகர்]
Today Only
தினசரி 5 காட்சிகள்
BILLION DOLLAR THREAT
(Action packed)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- மஞ்சுளா
எங்கள்தங்கராஜா

ராணி (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்பன் கலர்]

3-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
ஐந்து இளைஞர்களும், ஐவகை ஆயினும் ஆருயிர் நண்பர்கள் ஒவ்வொருவருடைய தனி வாழ்க்கையும் ஒருவகைப் பாலைவனம். இவர்களின் வாழ்வில் அழகும் இளமையும் எளிமையும், தூய்மையும் பரந்தநோக்குமுடைய பெண்ணொருத்தி வருகிறள். ஐவருக்கும் அவளில் ஒரு கண். அவளோ ஐவரிலும் ஒரு வகையான அன்பையே வைத்திருந்தாள். முடிவை அறியவெண் திரை விடையளிக்கும்.
பாலைவனச்சோலை
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்

இலங்கை – இந்திய கூட்டுத் தயாரிப்பில் உருவாகி ஒரே முறையில் இலங்கையிலும் இந்தியாவிலும் திரையிடப்படும் குடும்பக் காவியம். இளம் சிட்டுக்கள் பிரதாப் ராதிகா சேர்ந்து நடிக்கும் வண்ணக் காதல் காவியம். இலங்கையின் எழில் காட்சிகள் படத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு.
பிரதாப்-ராதிகா விஸ்வநாத்
டெல்லி கணேஷ் மற்றும் பலர்
நடிக்கும்
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

"கிளிநொச்சிப் பகுதியில்

# கிணறுகள் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படும்"

## அமைச்சர் ஹேரத் உறுதி

(கிளிநொச்சி)

''இவ்வரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் தேங்காய் உற்பத்தி 282 கோடி ாகக உயர்ந்துள்ளது. கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள தென்னை பயிர்ச்செய்கை பிராந்திய அலுவலகத்தை முழுமையாகப்பயன்படுத்தி உற்பத்தி அதிகரிப்பிற்கு உதவ வேண்டும். ஏழைக்கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு சிறந்த முறையில் பணியாற்றும் பாராளுமன்ற உறுப்பினரை நீங்கள் பெற்றிருப்பது பாக்கியமே. கிளிநொச்சிப் பகுதிகளில் சிறு கிணறுகள் அமைப்பதற்கு மானியம் வழங்க, முடிந்தவரை உதவி செய்வேன்''

இவ்வாறு, தெங்கு அபிவிருத்தி அமைச்சர் திரு. ஹறோல்ட் ஹேரத் நேற்றுக்காலை கிளிநொச்சியில் தென்னை பயிர்ச்செய்கை பிராந்திய அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி விஜயக்கோன், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, முல்லைத்தீவு அரச அதிபர் திரு. எஸ். ஞானச்சந்திரன், கிளிநொச்சி எம் பி. திரு. வீ. ஆனந்தசங்கரி, தெங்கு அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு பெர்ணன்டோ உட்படபலர் கலந்து கொண்டிருந்தனர். கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி தனதுரையில் தெற்கில் மிஞ்சுகின்ற தண்ணீரை அப்புறப்படுத்த மானியம் வழங்கப்படுகிறது. வடக்கில் தண்ணீரைப் பெறுவதற்கு மானியம் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. கிராஞ்சி, பூநகரி போன்ற பகுதிகளில் தென்னைச்செய்கைக்கு உகந்ததாக உள்ள 5,000 ஏக்கர் காணியை தலா 5 ஏக்கர் வீதம் வழங்கி தெங்குப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். (சி)

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு ஆசிரியர்.

அவர் கல்வி கற்பிக்கும் உயர் வகுப்பு மாணவர்கள், விடுமுறை காலத்தில் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்று கருதி, கல்லூரியிலேயே அவர் வகுப்புகளை நடத்தினர்.

மாணவர்கள் தங்களுக்குப் பொருத்தமான நாளைத் தேர்ந்தெடுக்க, அந்த நாளில் வாரத்துக்கு இரண்டு மணி நேரம் இலவசமாக அந்த ஆசிரியர் வகுப்புகளை ஆர்வத்துடன் நடத்தினர்.

பண்டத்தரிப்பிலுள்ள ஒரு கல்லூரியைச்சேர்ந்த அந்த 'ஆசிரியர் திலகம்' போல் ஆயிரத்தில் எத்தனை?

'ஊ [illegible]

## மின் ஊழியர் பயிற்சித் திட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை அதன் ஊழியர்களுக்கு உலக வங்கியின் உதவியுடன் 16 கோடி ரூபா செலவில் விசேட பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் மின்சார சபையின் பொறியியலாளர்கள், மின்முகாரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

## யாழ். கிளை அஞ்சல் சங்க வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங்கம் (யு பி ரி. ஓ.) யாழ். கிளை தனது வெள்ளி விழாவை நாளை கொண்டாடுகிறது.

மேற்படி சங்கத்தின் யாழ். கிளையின் இருபத்தைந்தாவது ஆண்டு விழா யாழ். அஞ்சல் அலுவலககட்டிடத்தில்ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். அஞ்சல் தொலை தொடர்பு சேவை சங்கத்தின் தலைவர் திரு உபாலி ஜயசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## "சனசமூக நிலையங்களின் பங்கு மகத்தானது"

(மட்டுவில்)

''சமுதாயத்தின் வளர்ச்சியில் சமுதாயத்தின் கூட்டுறவில், கலை கலாச்சாரப் பண்புகளில் சனசமூக நிலையங்களின் பங்கு மகத்தானது. இந்த உண்மையை நாட்டிலுள்ள சகல சனசமூக நிலையங்களும் நன்குணர்ந்து செயலாற்ற வேண்டும். அதற்கு மதன் மட்டுவிலூர் வளர்மதி சனசமூக நிலையம் ஓர் முன்னோடியாக அமைந்துள்ளது என்ருல் மிகையாகாது.

இவ்வாறு தென் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 17-வது ஆண்டு பூர்த்தி விழாவில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மட்டுவில் நுணுவில் கிராமோதய சபைத் தலைவர் திரு. க. இளையதம்பி கூறினர்.

வளர்மதி கலையரங்கில் நிலையத்தலைவர் திரு பொ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. க. இளையதம்பி, சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் திரு. எஸ். வி வைத்திலிங்கம் சட்டத்தரணி திரு. செ.அம்பிகைபாலன் திரு. சி. நவரத்தினம் டாக்டர் பே. பிலிப்ஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திரு. இளையதம்பி தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தேவையான அம்சங்கள் கல்வி, ஒழுக்கம் பண்பாடு, கலை, கலாச்சாரம் இத்தனைக்கும் கருவூலமாக இச் சனசமூக நிலையம் உள்ளது. பாலர் பாடசாலை நாடகமன்றம், மாதர் மன்றம் விளையாட்டுக்கழகம் நிதி உதவிச் சங்கம் உட்பட சகல அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு இக்கிராமத்திற்கு தொண்டாற்றி வருவதுடன் பாரதியின் பாதையில் சென்று புதுமைப் பெண்களையும் உருவாக்கி வருகிறது. மேலும் நாடகப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கலை கலாச்சாரப்போட்டிகளை நடத்தி தங்க, வெள்ளிப் பதக்கங்களையும் வழங்கி கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் ஊக்குவித்து வருகிறது. இப்படியான பெருமைகள்இச் சனசமூக நிலையத்திற்கு மட்டுமல்ல, இந்த ஊருக்கே பெருமதிப்பைக் கொடுக்கிறது என்ருர்.

ஆசிரியர் திரு. என்.கந்தையா பேசுகையில் கல்வி வெறும் ஏட்டுப்படிப்புடன்மட்டுமில்லாமல், பலதரப்பட்ட அம்சங்களுடன் சேர்ந்து வளர்ந்து வருகிறதுமல்லாமல், இன்று தமிழினத்தின் மத்தியில் புரையோடிப் போயுள்ள சாதி அமைப்பையும் தகர்த்தெறிந்துள்ளது.கூட்டுறவு சங்க தலைவர். திரு. எஸ் வி வைத்திலிங்கம் பேசுகையில் எதிர்கால சமுதாயத்தின் கைவலுவையும் தோள் வீரத்தையும், உள்ளத்தில் உறுதியையும் வளர்த்து வருகிறது என்ருர்.

இதைத் தொடர்ந்து போட்டிகளில் 1ம்,2ம்,3ம் பரிசுகளை பெற்ற நாட்டியங்கள் தங்க, வெள்ளி பதக்கங்களைப் பெற்றன. நாடகங்கள், பேச்சு பாடல் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ஏனைய விளையாட்டு சைக்கிள் ஓட்ட வீரர்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. சாவகச்சேரி எம்.பி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் திரு. சி. நவரத்தினம் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

## கொலை எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள தியேட்டரொன்றில் இரண்டாவது படக்காட்சி பார்த்து விட்டு காரில் சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிவசம்பு இரத்தினம் [24 வயது] என்ற இளைஞனின் மரணம் கொலை என்று யாழ். நீதவான் திரு.ரி ஜோகநாதன் தீர்ப்பளித்துள்ளார்.

சிவசம்பு இரத்தினம் தம்முடையமனைவி நான்கு உறவினர்கள் சகிதம் புன்னாலைக் கட்டுவனை நோக்கி காரில் திரும்பிக் கொண்டிருக்கையில் திருநெல்வேலிக்கும் கோண்டாவில் பஸ்டிப்போவுக்குமிடையில் கடந்த புதன்கிழமை அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானது தெரிந்ததே. (வெ)

## தமிழக புதிய ஆளுநர்

சென்னை

தமிழ் நாட்டின் புதிய ஆளுநராக திரு. எஸ்.எம். குரானு நேற்று பதவியேற்ருர்.

இவர் சென்னை தலைமை நீதிபதி திரு. கே. பி. எம். சிங் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவரின் பதவிப் பிரமாண வைபவத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள், சபாநாயகர் திரு ராஜாராம், சட்டமேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வெ)

## பீகாரில் வெள்ளப்பெருக்கு கிராமங்கள் நீரில் மூழ்கின

புதுடில்லி, செப் 3

பீகார் மாநிலத்தில் இடம் பெற்றுள்ள பெரும் வெள்ளப் பெருக்கினல் 1,000 கிராமங்கள் நீருள் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனுல் பெருமளவில் பயிர்களும் சேதமடைந்துள்ளன. கங்கை நதியின் நீர் மட்டம் 145 சென்ரி மீற்றர் உயர்ந்துள்ளது மீட்புப்பணிகளில் 1,000 படகுகள் ஈடுபட்டுள்ளன

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பார்சல்கள் ஹெலிகாப்டர் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இவர்களுக்கு விநியோகிக்க 10,000 தொன் அரிசி மத்திய அரசினுல் அனுப்பப்பட்டுள்ள .

ஒரிஸாவிலும் வெள்ள நிலைமை மோசமடைந்துள்ளது. (வெ)

## பரந்தன். .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரும்புவார்கள் என்றும் சமயாசமய ஊழியர்கள் படிப்படியாக வேலைக்குத் திரும்புவார்கள் என்றும் நம்பகமாகத் தெரியவருகிறது.

(பண்டத்தரிப்பு)

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சங்கத்தினர் ஆலய குறைபாடுகள் பற்றி யாழ் மாவட்ட அரசாங் அதிபருக்கு மகஜர் ஒன்று அனுப்பி உள்ளதை அடுத்து இவ்வாலயம் குறித்து நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உடுவில் உப அலுவலகத்தில் விசாரணை நடைபெறவுள்ளது.


ஸ. தொ. ஸ.

கூ. மொ. வி. ஸ்தாபனம் C.W.E.

குறைந்த விலையில்

**துவரம் பருப்பு**

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் இறக்குமதி செய்யப்பட்ட போஷாக்கு நிறைந்த துவரம் பருப்பு இப்பொழுது விலை குறைக்கப்பட்டு விற்பனைக்குண்டு.

மொத்த விலை - கிலோ ரூபா 16/-
சில்லறை விலை - கிலோ ரூபா 17/-

மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தயவுசெய்து பிராந்திய களஞ்சியப் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்
(மொத்த விற்பனை)

(யாழ்ப்பாணம் போன்: 497)

(4066)



**லொறிகள், வான்கள் உடன் விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ளதும்; ஒரே பாவனையிலுள்ளதுமான நான்கு லொறிகளும் இரண்டு மினி பஸ்ஸும் உடன் விற்பனைக்குண்டு.

வாகனங்களி விபரம்;

24 ஸ்ரீ 306 மொறிஸ் லொறி, 26 ஸ்ரீ 8461 மொறிஸ் லொறி,
22 ஸ்ரீ 9562 ஒஸ்ரின் லொறி, 22 ஸ்ரீ 681 மொறிஸ் லொறி.
27 ஸ்ரீ 3994 இசுசு ஈ. எல். எப். வான்.
27 ஸ்ரீ 533 இசுசு ஈ. எல். எப். வான்.

வாகனங்களை காரியாலய நேரங்களில் பார்வையிடுவதுடன் விலை விபரங்களை பேசித் தீர்க்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு

**மகாராஜா நிதி நிறுவனம்**

122 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 8267


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] செப். ஸ் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 160236/81 Elanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 589 and 8126.